# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசர கூட்டம் 2020-ம் வருடம் ஜனவரி 2021 மாதம் 06/01/2021 தேதி காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது அக்கூட்ட நடவடிக்கைகள் விபரம் பின்வருமாறு.

அக்கூட்டத்தில் கலந்துக்கொண்டவர்கள் – திரு . பெர்பெற்றி டெரன்ஸ் லியோன்,MSc.,
ஆணையாளர்(ம) தனி அலுவலர்

## பொருட்கள்

இந்நகராட்சிக்கு 15-வது மத்திய நிதிக்குழு (15th CFC Tied Grant Ist Installment) மானியத்தின் முதல் தவணையில் குடிநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் (Water Supply & Solid Waste Management Sectors) மேற்கொள்வதற்காக
ரூ. 29,17,774/- ஒதுக்கீடு/ பணிகள் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் கீழ்க்காணும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| Sl.No | Name of work | Estimate Amount (In lakhs) |
|---|---|---|
| | Proposed work to be taken under SBM | |
| 1. | Supply and Delivery of Mechanical Siever Machine in Padmanabhapuram Municipality | 1.50 |
| 2. | Construction of Segregation shed for MCC @ Compost yard in Padmanabhapuram Municipality | 2.50 |
| 3. | Supply and Delivery of Bio Shredder Machinary @ compost yard in Padmanabhapuram Municipality | 9.00 |
| 4. | Construction of Retaining wall. at Compost yard Marunthukottai in Padmanabhapuram Municipality | 17.00 |
| | Total | 30.00 |

மேற்படி மதிப்பீடு ரூ. 30,00,000/-ல் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.29,17,774/- போக மீதமுள்ள தொகை ரூ.82,226/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்படி திட்ட நிதி ஒதுக்கீட்டு விபரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும்.

மேற்படி பணிகளுக்கான திட்ட நிதி ஒதுக்கீடு போக கூடுதல் தொகை

ரூ. 82,226/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசர அவசியம் கருதி 15-வது மத்திய நிதிக்குழு நிதி ஒதுக்கீட்டின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகளில் வரிசை எண்.1,2,3,(ம)4-ல் குறிப்பிட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை பணியினை மேற்கொள்ள இந்நகர் மன்றம் நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டும் வரிசை எண்.1- ல் காணும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், திருநெல்வேலி அவர்களுக்கு மேற்படி பணிக்கான மதிப்பீடு மற்றும் கருத்துரு அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 0011/2020/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1746</u>

அனுமதிக்கப்பட்டது.

2)பத்மனாபபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கான நகராட்சி பங்குதொகை ,பத்மனாபபுரம் கூட்டு குடிநீர் திட்ட பணிகளுக்காக TNUIFSL –ன் கீழ் TNUDF/Projects/Padmanabhapuram WSIS (Loan from KFW assisted SMIF-TN-II-2) நிதி சேவை குழுமத்தின் மூலம் பெற்ற கடன் தொகை அதற்கான வட்டி தொகைகள் நகராட்சியின் நிதி நிலை மிகவும் மோசமாக உள்ள காரணத்தினால் மேற்படி இனங்கள் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பத்மனாபபுரம் கூட்டுக்குடிநீர் திட்ட பணிகள் நிறைவடைந்தவுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து கட்டணம் செலுத்தி குடிநீர் பெறப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படவேண்டியுள்ளது. அதற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 1508, நாள் .30.08.2019- ன் படி கீழ்க்கண்டவாறு குடிநீர் கட்டணம் கட்டிட பரப்பளவிற்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட வேண்டியும் தொடர்ந்து வரக்கூடிய ஒவ்வொரு 5 ஆண்டிலும் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை ஏற்கனவே உள்ள கட்டணத்திலிருந்து 10% உயர்த்தப்பட வேண்டும் என்றும் மற்றும் குடிநீர் இணைப்பு கட்டணம் / வைப்புத்தொகைகள் வரையறுக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**Deposit and tariff**

| Plinth Area of Assessment in Sq.ft | Proposed Deposits(Rs) | | Proposed Tariff(Rs.Per Month ) | |
|---|---|---|---|---|
| | **Domestic** | **Non-Domestic** | **Domestic** | **Non-Domestic** |
| **<500** | 5000 | 10000 | 120 | 240 |
| **501-1200** | 7500 | 15000 | 160 | 320 |
| **1201-2400** | 10000 | 20000 | 200 | 480 |
| **>2401 and above** | 15000* | 30000* | 240* | 600 |
| **Wt Average** | 7798 | 14613 | 160 | 312 |
| *This is the base rate for the plinth area of 2401 sq.ft . The deposit and tariff for plinth area above 2401 sq.ft have to be increased in proportion to the increase in plinth area. | | | | |

மேற்படி குடிநீர் இணைப்புக்கட்டணம் / வைப்புத்தொகைகள் மற்றும் உரிய காலத்தில் குடிநீர் கட்டணம் செலுத்தாத இணைப்புகளுக்கு அபராதம் வரையறுக்கப்பட்டுள்ளது. குடிநீர் விதிகள் மற்றும் உபவிதிகள் திருத்தம் செய்ய தனி அலுவலர் , பத்மனாபபுரம் நகராட்சி அவர்களின் தீர்மானம் எண் 1508, நாள் 30.08.2019- ன் படியும் , தலைமை பொறியாளர் , நகராட்சி நிர்வாக ஆணையரகம் , சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் 20006/2020/குவ3, நாள் 09.11.2020- ன் படி அனுமதி வழங்கியதை தொடர்ந்து குடிநீர் விதிகள் மற்றும் உபவிதிகள் திருத்தம் செய்யப்பட்டது.மாவட்ட அளவிலான தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் 27.11.2020 அன்று பிரசுரம் செய்யப்பட்டு பொது மக்களிடம் ஆட்சேபனை தெரிவிக்க 30 நாட்கள் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது 30 நாட்கள் முடிவடைந்த நிலையில் பொது மக்களிடமிருந்து எந்தவிதமான ஆலோசனைகளும், ஆட்சேபனைகளும் பெறப்படவில்லை. எனவே குடிநீர் விதிகள் மற்றும் உபவிதிகள் அரசிதழில் பிரசுரம் செய்யவும், அதற்காக ஆகும் செலவினத்தினை குடிநீர் விநியோக நிதியிலிருந்து செலவினம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு-</u>**

1.அனுமதி வழங்கலாம்.
2.குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகைகள் 01-01-2021 (ஜனவரி 2021) முதல் உயர்த்தி வசூலிக்கவும் அதனை நடைமுறைப்படுத்த திருத்தம் செய்யப்பட்ட குடிநீர் விதிகள் மற்றும் உபவிதிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920-ன் படி அரசிதழில் பிரசுரம் செய்யலாம்.
**( ந.க.எண்..1200/2017/இ1)**

**<u>நகர் மன்றத் தீர்மானம் எண். 1747</u>**

மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திடவும் திருத்தப்பட்ட துணை விதிகள் மற்றும் கட்டணங்கள் 01/01/2021 முதல் அமுல் படுத்திடவும் தீர்மானிக்கப்பட்டது.